# கனேடிய தலைவர்கள் கலந்து கொண்ட பொது நிகழ்ச்சியில் 'காலிஸ்தான்' என்ற முழக்கங்களுக்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது

ஏப்ரல் 29, 2024

கனேடிய பிரதமரால் தனிப்பட்ட முறையில் உரையாற்றப்பட்ட நிகழ்வில் ‘காலிஸ்தான்’ என்ற பிரிவினைவாத முழக்கங்களை எழுப்பியது தொடர்பாக கனேடிய துணை உயர் ஆணையர் இன்று வெளியுறவு அமைச்சகத்திற்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இத்தகைய சீர்குலைக்கும் செயல்கள் இந்த நிகழ்வில் கட்டுப்பாடின்றி நடைபெற அனுமதிக்கப்படுவது குறித்து இந்திய அரசு ஆழ்ந்த கவலையையும், கடும் எதிர்ப்பையும் தெரிவித்தது. மேலும் பிரிவினைவாதம், தீவிரவாதம் மற்றும் வன்முறைக்கு கனடாவில் கொடுக்கப்பட்டுள்ள அரசியல் இடத்தை இது மீண்டும் எடுத்துக்காட்டுகிறது. அவர்களது தொடர்ச்சியான வெளிப்பாடுகள் இந்தியா-கனடா உறவுகளை பாதிப்பது மட்டுமல்லாமல், கனடாவில் வன்முறை மற்றும் குற்றவியல் சூழலை ஊக்குவிப்பதோடு, அதன் சொந்த குடிமக்களுக்கு தீங்கு விளைவிக்கிறது.

**புது தில்லி**
**ஏப்ரல் 29, 2024**